# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

Calendar Miscellaneous
Preliminary Registered Case No. **S.C. No.1 of 2025**
Sessions

| | |
|---|---|
| Deposition of Witness for | : **PW9(LW13)** |
| Name | : திரு. மாதையன் |
| Father's Name | : கோபால் |
| Village | : கள்ளிபுரம் |
| Taluk | : பென்னாகரம் |
| Calling | : கூலி வேலை |
| Age | : 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **03.11.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 1 வருடத்திற்கு முன்பு மணி என்பவர் என்னிடம் ஹீரோ ஸ்பிலின்டர் இரு சக்கர வாகனத்தை என்னிடம் அடமானம் வைத்தார். அதற்கு ஈடாக நான் ரூ.15,000/- மணி என்பவரிடம் கொடுத்துவிட்டேன். பிறகு இரண்டு மாதங்கள் ஆகியும் மணி என்பவர் வண்டியை கேட்டு வரவில்லை. என் தம்பி கார்முகில் என்பவருக்கு அந்த வண்டியை நான் கொடுத்துவிட்டேன்.

01.11.2024ம் தேதி சத்தியமூர்த்தி மற்றும் ஹரிஷ் குமார் என்னிடம் போனில் ஊருக்கு செல்ல இரு சக்கர வாகனத்தை கொடுக்குமாறு கேட்டார். அப்போது என் தம்பி கார்முகிலிடம் வண்டி உள்ளது. தற்போது என்னிடம் வண்டி இல்லை என்று சொன்னேன். மகேந்திரமங்கலம் காவல் நிலையத்திற்கு சத்தியமூர்த்தி என்பவர் அசோக்குமார் என்பவரை கொலை செய்துவிட்டார் என்று கிடைக்கபெற்ற தகவலின் பேரில் காவல் நிலையம் சென்று நடந்த உண்மைகளை சொன்னேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**</u>

வண்டி அடமானம் வைத்தது தொடர்பாக ஆவணங்கள் எதுவும் நான் காவல் ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வண்டி எதிரி யாரிடம் இருந்து பெற்று சென்றார் என்ற விவரம் நான் போலீஸ் விசாரணையின்போது கூறவில்லை என்றால் சரிதான். 01.11.2024ம் தேதியில் நான் எதிரியை பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் வண்டியை எடுத்து சென்ற பிறகு 3 நாட்கள் கழித்து தான் போலீஸ் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். ஹரிஷ்குமார் என்னிடம் வண்டியை நேரில் பார்த்து கேட்கவில்லை என்றால் சரிதான். தொலைபேசி மூலமாகத்தான் என்னிடம் கேட்டார். நான் அரசு தரப்பிற்கு ஏதுவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 03.11.2025.

THIRUMAGAL C | Digitally signed by THIRUMAGAL C
Date: 2025.11.03 16:51:40 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.

Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

| | | |
|---|---|---|
| Calendar Miscellaneous<br>Preliminary Registered<br>Sessions | Case No. | **S.C. No.1 of 2025** |

Deposition of Witness for : **PW10(LW14)**

Name : திரு. கார்முகில்

Father's Name : சுரேஷ்

Village : கள்ளிபுரம்

Taluk : பென்னாகரம்

Calling : Collection Agent (Bajaj Finance)

Age : 29

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **03.11.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 01.11.2024ம் தேதி மாலை 04.00 மணிக்கு ஹரிஷ்குமார் மற்றும் சத்தியமூர்த்தி ஆகியோர் என் அண்ணனிடம் போன் செய்து ஹீரோ ஸ்பிலின்டர் TN 29 BM 2308 இரு சக்கர வாகனத்தை கேட்டார். எனது அண்ணன் சத்தியமூர்த்தி என்பவரிடம் வண்டியை கொடுத்து விடு என்று சொன்னார். 04.11.2024ம் தேதி அன்று மகேந்திரமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் நிலையம் அழைத்து என்னை விசாரணை செய்தார். உங்கள் வண்டியை எடுத்து

கொண்டுபோய்தான் சத்தியமூர்த்தி அசோக்குமாரை கொலை செய்துவிட்டார் என்று சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**</u>

அசோக்குமார் எப்படி இறந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எதிரியை 01.11.2024ம் தேதி நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. போலீஸ் விசாரணையின்போது எதிரி என்னை நேரில் பார்த்து வண்டியை வாங்கி சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். வண்டியை வாங்கி சென்று 3 நாட்கள் கழித்து தான் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். ஹரிஷ்குமார் என்னிடம் நேரில் வண்டியை கேட்கவில்லை என்றும் அரசு தரப்பிற்கு ஏதுவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 03.11.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C Date: 2025.11.03 16:51:46 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.